## விழுப்புரம் மத்திய மாவட்டம் – சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்

# வழக்கறிஞர் கு.பா.பழனியப்பன் தலைமையில் அ.தி.மு.க. - பா.ம.க. வினர் கழகத்தில் இணைந்தனர்!

### கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில்!



**சென்னை, செப். 26-**

**முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் விழுப்புரம் மத்திய மாவட்டம், மாற்றுக் கட்சிகளை சேர்ந்த சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் வழக்கறிஞர் கு.பா.பழனியப்பன் தலைமையில் அ.தி.மு.க. - பா.ம.க. ஆகிய கட்சி நிர்வாகிகள் தி.மு.க.வில் இணைந்தனர்.**

முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், இன்று (25-09-2025) காலை, விழுப்புரம் மத்திய மாவட்டம், வழக்கறிஞர் முன்னாள் எம்.எல்.ஏ. கு.பா. பழனியப்பன் தலைமையில், அ.தி.மு.க.வைச் சேர்ந்த மாவட்ட பேரவை துணைச் செயலாளரும் - விழுப்புரம் நகர்மன்ற முன்னாள் துணை த்தலைவருமான கோ.பார்த்திபன், எம்.ஜி. ஆர்.மன்ற இணைச் செயலாளர் ஏ.தணிகாசலம், கோலியனூர் ஒன்றிய முன்னாள் செயலாளர் எஸ்.செல்வம், விழுப்புரம், மாவட்ட பிரதிநிதி திருமதி எஸ்.கிளாரா மற்றும் பாலன், ராஜா

பா.ம.க.கட்சியைச் சேர்ந்த மாவட்ட முன்னாள் செயலாளரும் - தலைமை நிலைய முன்னாள் செயலாளருமான என்.எம்.கருணாநிதி, மாவட்ட துணைச் செயலாளர் டிங்கர் அ.முனுசாமி - விழுப்புரம் மேற்கு நகரச் செயலாளர் ஜெ.சையத்முபாரக், மற்றும் எஸ்.ராஜா, ஆர்.அமரன் ஆகியோர் தி.மு.க.வில் இணைந்தனர்.

அதுபோது கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு, எம்.பி., முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, விழுப்புரம் மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் இரா. இலட்சுமணன், எம்.எல்.ஏ., கழக மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ், ஆகியோர் உடனிருந்தனர்.

## சீர்காழி அ.தி.மு.க. நகரச் செயலாளர்

# ஜெ.பாலமுருகன் தலைமையில் அ.தி.மு.க.வினர் கழகத்தில் இணைந்தனர்!

### கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில்!



**சென்னை, செப். 26 -**

**முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், நேற்று (25-09-2025) காலை, மயிலாடுதுறை மாவட்டம், அ.தி.மு.க.வைச் சேர்ந்த சீர்காழி நகரச் செயலாளர் ஜெ. பாலமுருகன், எம்.சி., தலைமையில் அ.தி.மு.க.வைச் சேர்ந்த நகர துணைச் செயலாளர் பா.பரணிதரன், சீர்காழி நகர்மன்ற உறுப்பினர் தெ. வெற்றிச்செல்வன் ஆகியோர் தி.மு.க.வில் இணைந்தனர்.**

அதுபோது கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு, எம்.பி., முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, மயிலாடுதுறை மாவட்டச் செயலாளர் நிவேதா எம்.முருகன், எம்.எல்.ஏ., சீர்காழி நகரக் கழகச் செயலாளர் மா.சுப்புராயன், மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளர் ஆர்.தனராஜ் ஆகியோர் உடனிருந்தனர்.



தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை கழக விளையாட்டு மேம்பாட்டு அணி துணைச் செயலாளர் வழக்கறிஞர் பி.கே.பாபு தனது பிறந்த நாளை முன்னிட்டு சந்தித்து வாழ்த்து பெற்றார்.




சீனாவின் பெய்டைஹேயில் செப்டம்பர் 13 முதல் 21 வரை நடைபெற்ற உலக சாம்பியன்ஷிப் ஸ்பீட் ஸ்கேட்டிங் போட்டியில் தங்கப் பதக்கத்தை வென்ற இந்தியாவின் முதல் வீரர் என்ற வரலாற்றை படைத்த தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் பன்னாட்டு அளவிலான போட்டிகளில் பதக்கங்கள் பெறுவதற்கான ஊக்குவிப்பு திட்ட வீரர் ஆனந்த்குமார் வேல்குமார், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேற்று (25.9.2025) சந்தித்து வாழ்த்துப் பெற்றார். இந்நிகழ்வில், கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, ஆணைய உறுப்பினர் செயலர் .ஜெ.மேகநாத ரெட்டி, பெற்றோர் மற்றும் பயிற்சியாளர் உடனிருந்தனர்.

## தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் கு.செல்வப்பெருந்தகை மீது கீழ்த்தரமாக விமர்சனம்!

# நாலாந்தர பேச்சாளராக மாறி வருகிறார் பழனிசாமி!

### கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.ராசா எம்.பி. அறிக்கை!

**சென்னை, செப்.26-**

**தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகையை கீழ்தரமாக விமர்சித்து நாலாந்தர பேச்சாளராக மாறி வருகிறார் பழனிசாமி என்று கழக துணைப் பொதுச்செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஆ.ராசா அறிக்கையில் கண்டனம் தெரிவித்துள்ளார்.**



இது குறித்து ஆ.இராசா வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமியின் சுந்தரா டிராவல்ஸ் பயணத்தில் நீலகிரி மாவட்டத்தில் பேசும்போது தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவர் செல்வப்பெருந்தகை அவர்களைத் தரம்தாழ்ந்து, இழிவுபடுத்திப் பேசியிருப்பது கடும் கண்டத்திற்குரியது.

தி.மு.க. கூட்டணிக் கட்சிகள் பற்றியும் அதன் தலைவர்கள் பற்றியும் தொடர்ந்து அவதூறுகளை பேசி வருகிறார் எடப்பாடி பழனிசாமி. தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வப்பெருந்தகை அவர்களைப் பிச்சைக்காரார் என்றும், ஒட்டுப் போட்ட சட்டைப் போட்டவர் என்றும் பேசி இருப்பது அநாகரிகத்தின் உச்சம்.

ஒரு தலைவருக்கு உரிய எந்தப் பண்பும் எடப்பாடி பழனிசாமிக்கு இல்லை. நாலாந்தரப் பேச்சாளராக மாறி வருகிறார். ஒன்றிய உள் துறை அமைச்சர் அமித்ஷா வீட்டிற்குப் போய்விட்டு முகத்தை மூடியபடியே காரில் வந்தவர் எல்லாம் 'பிச்சைக்காரன்' எனப் பேசுவது சரியா?

**மோசமான பேச்சு எதிர்வினையை உண்டாக்கும்!**

தன்னுடைய மோசமான பேச்சு, எதிர்வினையை உண்டாக்கும்; பார்வையாளர்களை முகம்சுளிக்க வைக்கும்; வாதப் பிரதிவாத ங்களை ஏற்படுத்தும் என நன்கு தெரிந்துதான் வசவு வார்த்தைகளைப் பொதுவெளியில் எந்தத் தயக்கமும் இல்லாமல் பழனிசாமி பேசியிருக்கிறார்.

சட்டமன்றத் தேர்தல் நெருங்கிவரும் நேரத்தில், அ.தி.மு.க. கூட்டணிக்கு வருமாறு கட்சிகளுக்கு பழனிசாமி தொடர்ந்து அழைப்பு விடுத்தும் அவரது கோரிக்கையை யாரும் செவிசாய்க்கவில்லை. மாபெரும் கூட்டணி அமைப்போம் என பழனிசாமி சொல்லிக் கொண்டிருக்கும் நிலையில் ஏற்கெனவே கூட்டணியில் இருந்த பன்னீர்செல்வமும், தினகரனும் வெளியேறிவிட்டார்கள். இப்படியான விரக்தியில் எடப்பாடி பழனிசாமியின் பேச்சுக்கள் நாராச நடையில் மாறிக் கொண்டிருக்கிறது.

**செங்கோட்டையன் கட்டையைப் போடுகிறார்!**

அ.தி.மு.க.வை ஒருங்கிணைக்க வேண்டும் என்று செங்கோட்டையன் ஒரு பக்கம் கட்டையைப் போடுகிறார். துரோகத்தின் - வஞ்சகத்தின் ஒட்டுமொத்த உருவமாக உள்ள பழனிசா மியை முதல்வர் வேட்பாளராக ஏற்க முடியாது என்று சொல்லி டி.டி.வி. தினகரன் முட்டுக் கட்டைப் போடுகிறார். பா.ஜ.க. தலைமை தொடர்ந்து குட்டக் குட்ட எடப்பாடி பழனிசாமி குனிந்து போகிறார். இப்படிப் பதுங்கிப் பம்மிக் கிடக்கும் பழனிசாமி தி.மு.க. கூட்டணிக் கட்சிகள் என்றால் வீராவேசம் காட்டுவார்.

அடுத்து யார் அ.தி.மு.க. வில் குழப்பத்தை ஏற்படுத்தப் போகிறார் என்று தன்னுடைய சகாக்களையே நம்ப முடியாத பரிதாப நிலையில் இருப்பவர் எடப்பாடி பழனிசாமி. விரக்தியில் விளம்பில் உள்ள அவர் தி.மு.க. கூட்டணியில் ஒற்றுமையில்லை, குழப்பம் நிலவுகின்றது என்று கூறுவது எல்லாம் நல்ல வேடிக்கை.

தமிழ்நாட்டை வஞ்சித்து வரும் பா.ஜ.க.வுடன் கூட்டணி சேர்ந்து தமிழ்நாட்டு மக்களுக்குத் துரோகம் செய்துள்ள எடப்பாடி பழனிச்சாமி, காங்கிரஸ் கட்சியின் தலைவருடைய விசுவாசம் பற்றிப் பேச ஒரு தகுதியும் இல்லை.

இவ்வாறு ஆ.இராசா எம்.பி. அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## வணிகத் திருவிழாவைத் தொடங்கி வைக்க – நாளை

# நந்தம்பாக்கம் வருகை தரும் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு உற்சாக வரவேற்பு!

### கழகத்தினர் திரண்டு வந்து பங்கேற்பீர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள்!

காஞ்சிபுரம், ஆக.26-

நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் நாளை வணிகத் திருவிழாவைத் தொடங்கி வைக்க வருகை தரும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு உற்சாக வரவேற்பு அளிக்க கழகத்தினர் திரண்டு வந்து பங்கேற்பீர் என மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

வணிகத் திருவிழாவை தொடங்கி வைக்க வருகை தரும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் நாளை 27.9.2025 சனிக்கிழமை காலை 10 மணியளவில் உற்சாக வரவேற்பு அளிக்கப்படவுள்ளது.



இந்த வரவேற்பில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள மாவட்ட - மாநகர - பகுதி - ஒன்றிய - நகர - பேரூர் - கழக நிர்வாகிகள் - தலைமைசெயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், கழக அணிகளின் நிர்வாகிகள், கழக செயல்வீரர்கள் உள்ளிட்ட அனைவரும் பல்லாயிரக்கணக்கில் அணி திரண்டு வந்து பங்கேற்க வேண்டும் என்று மாவட்டத்தில் உள்ள கழகத்தினர் அனைவரையும் அழைக்கின்றேன்.

இவ்வாறு அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிக்கையில் கூறியுள்ளார்.

## சென்னை தெற்கு மாவட்டம் – சோழிங்கநல்லூர் மேற்குப் பகுதி

# 188 'அ' வட்டத்தில் மாற்றுக் கட்சியினர் கழகத்தில் இணைந்தனர்!

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் முன்னிலையில்! எஸ்.வி.ரவிச்சந்திரன் பங்கேற்பு

சென்னை, செப். 26-

சோழிங்கநல்லூர் மேற்குப் பகுதி 188 அ வட்டத்தைச் சார்ந்த மாற்றுக் கட்சியினர் 50 க்கும் மேற்பட்டோர் அமைச்சர் மா.சுப்பிரமணியன் முன்னிலையில் நேற்று முன் தினம் கழகத்தில் சேர்ந்தனர்

சென்னைத் தெற்கு மாவட்ட கழகச் செயலாளர் - அமைச்சர் மா.சுப்பிரமணியன் முன்னிலையில் சோழிங்கநல்லூர் தொகுதி 14வது மண்டலம், 188 அ வட்டம் அ.தி.மு.க., பி.ஜே.பி. மற்றும் த.வெ.க கட்சிகளைச் சேர்ந்த 50 பேர் அ.தி.மு.க. மாவட்டப் பிரதிநிதி ஜெயபிரகாஷ், மனோகர், பி.ஜே.பி. மண்டல செயலாளர் கே. ரவி, மண்டல இளைஞர் அணி தலைவர் சியாம்முத்தையா மற்றும் த.வெ.க வர்த்தகர் அணி துணை அமைப்பாளர் ராபர்ட் ஆகியோர் தலைமையில் கழகத்தில் இணைந்தனர். இதில் ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா எம்.எல்,ஏ., சோழிங்க நல்லூர் மேற்கு பகுதி கழக செயலாளர் - மண்டலக் குழுத்தலைவர் பெருங்குடி எஸ். வி.ரவிச்சந்திரன் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.



நேற்று சேப்பாக்கம் பொதுப்பணித்துறை பயிலரங்கில் அமைச்சர் .எ.வ.வேலு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்வு செய்யப்பட்டு, பொதுப்பணித்துறையில் பணியில் சேர்ந்த உதவிப் பொறியாளர்களுக்கு 16.09.2025 முதல் 25.09.2025 வரை நடைபெற்ற பயிற்சி வகுப்புகளுக்குச் சென்று பார்வையிட்டு, சிறப்புரையாற்றினார். இதில் கூடுதல் தலைமைச் செயலாளர்கள் மங்கத்ராம் சர்மா பொறியாளர் எஸ்.மணிவண்ணன் உள்ளிட்ட உயரதிகாரிகள் கலந்து கொண்டனர்.



சென்னை எத்திராஜ் மகளிர் கல்லூரியில் நேற்று (25.09.2025) நடைபெற்ற வணிக முதுகலை மற்றும் ஆராய்ச்சித் துறையின் பொன்விழா கொண்டாட்டத்தில், அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா காபி டேபிள் புத்தகத்தை வெளியிட்டார். எத்திராஜ் கல்லூரி அறக்கட்டளை தலைவர் வி.மு.முரளிதரன், முதல்வர் மற்றும் செயலாளர் டாக்டர். எஸ். உமா கௌரி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.